https://www.qb365.in/materials/

# Model question paper 2019 - 2020 / மாதிரி வினாத்தாள் 2019 - 2020

X STD - பத்தாம் வகுப்பு

SOCIAL SCIENCE - சமூக அறிவியல்

(English & Tamil Version / ஆங்கிலம் மற்றும் தமிழ்)

Time Allowed : 15 min + $2^1/_2$ hrs — Maximum Marks : 100

காலம் அளவு : 15 நிமிடம் + $2^1/_2$ மணி — மொத்த மதிப்பெண்கள் : 100

Instruction : (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use Blue or Black ink to write and underline and pencil to draw diagrams.

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Note : This question paper contains four parts.

குறிப்பு : இவ்வினாத்தாள் நான்கு பகுதிகளைக் கொண்டது.

## Part - 1 / பகுதி - 1

(Marks : 14) / (மதிப்பெண்கள் : 14) 14X1=14

Note : (i) Answer all the 14 questions

(ii) Choose the most suitable answer from the given four alternatives and write the option code with the corresponding answer

குறிப்பு : (1) இப்பகுதியில் உள்ள அனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(2) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1 With whom of the following was the Lateran Treaty signed by Italy?

a) Germany b) Russia c) Pope d) Spain

இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையை செய்து கொண்டது?

அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) போப் ஈ) ஸ்பெயின்

https://www.qb365.in/materials/

2 Where was the third session of the Indian National Congress held?

a) Marina b) Mylapore c) Fort St. George d) Thousand Lights

இந்திய தேசிய காங்கிரஸின் மூன்றாவது கூட்டம் எங்கு நடைபெற்றது?

அ) மெரினா ஆ) மைலாப்பூர்

இ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை ஈ) ஆயிரம் விளக்கு

3 Who was the first Indian Judge of the Madras High Court?

a) T. Muthuswamy b) P.S. Sivasamy c) V.S. Srinivasa Sastri d) G.A. Natesan

சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதி யார்?

அ) T. முத்துசாமி ஆ) P.S. சிவசாமி இ) V.S. சீனிவாச சாஸ்திரி ஈ) G.A. நடேசன்

4 India's first organised trade union, the Madras Labour Union was formed in

a) 1918 b) 1917 c) 1916 d) 1914

இந்தியாவில் முதலில் ஒழுங்கமைக்கப்பட்ட சென்னை தொழிற்சங்கம் உருவாக்கப்பட்ட ஆண்டு

அ) 1918 ஆ) 1917 இ) 1916 ஈ) 1914

5 Assertion (A): The Revolt of 1857 was brutally suppressed by the British army.

Reason (R): The failure of the rebellion was due to the absence of Central authority.

a) Both (A) and (R) are wrong

b) (A) is wrong and (R) is correct

c) Both (A) and (R) are correct and R is the correct explanation of A

d) Both (A) and (R) are correct, but R is not the correct explanation of A

கூற்று : பிரிட்டிஷ் அரசு 1857ஆம் ஆண்டு கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.

காரணம் : மையப்படுத்தப்பட்ட தலைமை இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறு

ஆ) கூற்று தவறு, காரணம் சரி

இ) கூற்று மற்றும் காரணம் சரி. கூற்றுக்குக் காரணம் சரியான விளக்கமாகும்

ஈ) கூற்று மற்றும் காரணம் சரி. கூற்றுக்குக் காரணம் சரியான விளக்கமல்ல

6 Pick the odd one out:

a) Khadar b) Bhangar c) Alluvial soil d) Black soil

பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்:

அ) காதர் ஆ) பாங்கர் இ) வண்டல் மண் ஈ) கரிசல் மண்

https://www.qb365.in/materials/

7 A line joining the places of equal rainfall is

a) Isohyet b) Isobar c) Isotherm d) Latitude

ஒரேஅளவு மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு

அ) சமவெப்பக் கோடு ஆ) சம மழைக்கோடு

இ) சம அழுத்தக் கோடு ஈ) அட்சக் கோடு

8 The first paper Industry was started in

a) Raniganj b) Durgapur c) Hoogly d) Baliganj

முதல் காகித தொழிற்சாலை தொடங்கப்பட்ட இடம்

அ) ராணிகஞ்ச் ஆ) துர்க்காபூர் இ) ஹூக்ளி ஈ) பாலிகஞ்ச்

9 The scientific study of different aspects of population is called

a) Photography b) Demography c) Choreography d) Population density

மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு

அ) ஒளிப்படவியல் ஆ) மக்களியல் இ) ஆடற்கலையியல் ஈ) மக்களடர்த்தி

10 The latitudinal extent of Tamil Nadu is

a) 8°5′N to 13°35′N b) 8°5′S to 13°35′S c) 8°0′N to 13°5′N d) 8°0′S to 13°05′S

தமிழ்நாட்டின் அட்சப்பரவல்

அ) 8°5′வ - 13°35′வ ஆ) 8°5′தெ - 13°35′Sதெ

இ) 8°0′வ - 13°5′வ ஈ) 8°0′தெ - 13°05′தெ

11 Arrange the following in the correct chronological order and choose the correct answer from the code given below.

(i) Panchsheel (ii) Nuclear test at Pokhran

(iii) Twenty-year Treaty (iv) First Nuclear test

a) (i), (iii), (iv), (ii) b) (i), (ii), (iii), (iv) c) (i), (ii), (iv), (iii) d) (i), (iii), (ii), (iv)

பின்வரும் கூற்றினை காலவரிசைப்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(i) பஞ்சசீலம் (ii) பொக்ரானில் அணுச்சோதனை

(iii) இருபது ஆண்டுகள் ஒப்பந்தம் (iv) முதலாவது அணுச்சோதனை

அ) (i), (iii), (iv), (ii) ஆ) (i), (ii), (iii), (iv) இ) (i), (ii), (iv), (iii) ஈ) (i), (iii), (ii), (iv)

12 The Chief Justice of the Supreme Court can hold the office up to the age of (in year)

a) 58 b) 60 c) 62 d) 65

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது (ஆண்டுகளில்)

அ) 58 ஆ) 60 இ) 62 ஈ) 65

https://www.qb365.in/materials/

13 Choose the incorrect statement(s):

(i) Shortage of goods, whether natural or artificial, is the root cause of black money.

(ii) Industrial sector has been the major contributor to black money.

(iii) Smuggling is one of the major sources of black money.

(iv) When the tax rate is low, more black money is generated.

a) (i) and (ii) b) (iv) c) (i) d) (ii) and (iii)

தவறான கூற்றினை / கூற்றுகளை தேர்ந்தெடுக்கவும்:

(i) இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பண்டங்களின் பற்றாக்குறை கருப்பு பணத்திற்கு மூலக் காரணம் ஆகும்.

(ii) கருப்புப் பணம் தோன்றுவதற்கு மிக முக்கிய பங்கு வகிப்பது தொழிற்துறை ஆகும்.

(iii) கருப்புப் பணத்திற்கு கடத்தல் ஒரு முக்கிய மூலக் காரணம்.

(iv) வரிவிகிதம் குறைவாக இருக்கும்போது, அதிகளவில் கருப்புப் பணம் உருவாக்கப்படுகிறது.

அ) (i) மற்றும் (ii) ஆ) (iv) இ) (i) ஈ) (ii) மற்றும் (iii)

14 Basic Component(s) of food and nutrition security is / are

a) availability b) access

c) absorption d) all

உணவு மற்றும் சத்துணவு பாதுகாப்பின் அடிப்படைக் கூறு(கள்)

அ) கிடைத்தல் ஆ) அணுகுதல்

இ) முழு ஈடுபாடு ஈ) அனைத்தும்

## PART - II / பகுதி - II

(Marks : 20) / (மதிப்பெண்கள் : 20)

Answer any 10 questions. Question No. 28 is compulsory. 10 X 2 = 20

எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

28 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

15 Explain the Monroe Doctrine.

மன்றோ கோட்பாட்டை விளக்குக.

16 What was Marshall Plan?

மார்ஷல் திட்டம் என்றால் என்ன?

17 Write the objectives of Home Rule Movement.

தன்னாட்சி இயக்கத்தின் குறிக்கோள்களை விவரிக்கவும்.

https://www.qb365.in/materials/

18 Name the Sangam texts for which Maraimalai Adigal wrote commentaries.

மறைமலை அடிகள் விளக்கவுரை எழுதிய சங்க நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

19 Name the neighbouring countries of India.

இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை எழுதுக.

20 State the types of agriculture practices in India?

இந்தியாவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக.

21 Define "International trade".

"பன்னாட்டு வணிகம்" வரையறுக்க.

22 Write a short note on Mangrove forest in Tamil Nadu.

தமிழ்நாட்டில் காணப்படும் மாங்குரோவ் காடுகளைப் பற்றி சிறு குறிப்பெழுதுக.

23 What is Money Bill?

நிதி மசோதா என்றால் என்ன?

24 Mention the names of the member countries of BRICS.

பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

25 What is per capita income?

தனிநபர் வருமானம் என்றால் என்ன?

26 Define: Food Security according to FAO.

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின்படி உணவு பாதுகாப்பு என்பதனை வரையறுக்க.

27 Define: Tax

வரையறுக்க: வரி

28 What do you know about Renewable resources?

புதுப்பிக்கக் கூடிய வளங்கள் பற்றி நீவிர் அறிவதென்ன?

## PART - III / பகுதி - III

(Marks : 50) / (மதிப்பெண்கள் : 50) 10 X 5 = 50

Answer any 10 questions. Question No. 42 is compulsory.

எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

42 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

29 Fill in the blanks:

(i) _________ was the Headquarters of the Council of Europe.

https://www.qb365.in/materials/

(ii) __________ Soil is suitable for the cultivation of tea and coffee plants.

(iii) __________ is the first women Governor of Tamil Nadu.

(iv) The term globalization invented by __________.

(v) __________ is the highest peak of South India.

கோடிட்ட இடங்களை நிரப்புக:

(i) ஐரோப்பிய குழுமத்தின் தலைமை __________ நகரில் அமைந்துள்ளது.

(ii) தேயிலை மற்றும் காஃபி விளைவதற்கு உகந்த மண் __________ ஆகும்.

(iii) __________ தமிழகத்தின் முதல் பெண் ஆளுநர் ஆவார்.

(iv) __________ ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.

(v) தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் __________.

30 Match the following:

| | |
|---|---|
| (i) Hindenburg | - Titu Mir |
| (ii) Wahhabi Rebillion | - Kalayar Kovil |
| (iii) Tani Tamil Iyakkam | - Germany |
| (iv) Syngman Rhee | - Maraimalai Adigal |
| (v) Marudhu Brothers | - South Korea |

பொருத்துக:

| | |
|---|---|
| (i) ஹிண்டன் பர்க் | - டிடு மீர் |
| (ii) வாஹாபி கிளர்ச்சி | - காளையார் கோவில் |
| (iii) தனித் தமிழ் இயக்கம் | - ஜெர்மனி |
| (iv) சிங்மென் ரீ | - மறைமலை அடிகள் |
| (v) மருது சகோதரர்கள் | - தென் கொரியா |

31 Match the Following:

| | |
|---|---|
| (i) Mazagaon Dock | - Coal |
| (ii) Black Gold | - Nanda Devi |
| (iii) Hirakud | - Brahmaputra |
| (iv) Biosphere Reserve | - Mahanadi |
| (v) Tsangpo | - Mumbai |

https://www.qb365.in/materials/

பொருத்துக:

(i) மேசகான் கப்பல் கட்டும் தளம் - நிலக்கரி

(ii) கருப்பு தங்கம் - நந்தாதேவி

(iii) ஹிராகுட் - பிரம்மபுத்ரா

(iv) உயிர்கோள காப்பகம் - மகாநதி

(v) சாங்போ - மும்பை

32 a) Distinguish between

(i) Weather and Climate

(ii) Agro based Industries and Mineral based Industries

b) Give reason: Rain water harvesting is necessary.

அ) வேறுபடுத்துக.

(i) வானிலை மற்றும் காலநிலை

(ii) வேளாண் சார்ந்த தொழிலகங்கள் மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்

ஆ) காரணம் கூறுக: மழைநீர் சேகரிப்பு அவசியம்.

33 Assess the structure and the activities of the UN.

ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க.

34 What do you know about 'salt march to vedaranyam'?

வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தைப் பற்றி குறிப்பு எழுதுக.

35 Write about southwest monsoon.

தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.

36 Give an account of water resources of Tamil Nadu.

தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களைப் பற்றி எழுதுக.

37 Point out the Fundamental Rights.

அடிப்படை உரிமைகளைப் பற்றி குறிப்பிடுக.

38 Explain about Panchsheel principles.

பஞ்சசீல கோட்பாடுகளைப் பற்றி விவரிக்க.

39 What are the Important characteristics of successful Industrial Clusters.

தொழிற்தொகுப்புகள் வெற்றி பெற முக்கியப் பண்புகள் யாவை?

40 What are the methods of calculating Gross Domestic Product? and explain.

GDP யை கணக்கிடும் முறைகள் யாவை? அவற்றினை விவரிக்க.

https://www.qb365.in/materials/

Note: Blind Candidates have to write only notes for the questions related to Time Line Chart and Map

குறிப்பு : பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.

41 Draw a time line for the following:

Write any five important events between 1920-1940.

கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக:

1920 முதல் 1940 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

42 Mark the following places on the World map.

(i) Great Britain

(ii) Germany

(iii) Russia

(iv) Hiroshima

(v) Hawai Island

உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.

(i) கிரேட் பிரிட்டன்

(ii) ஜெர்மனி

(iii) ரஷ்யா

(iv) ஹிரோஷிமா

(v) ஹவாய் தீவு

PART - IV / பகுதி - IV

(Marks : 16) / (மதிப்பெண்கள் : 16)

Answer both questions. 2 X 8 = 16

இரு வினாக்களுக்கும் விடையளிக்க.

43 (a) Balkan Wars

(i) Why was Balkan League formed?

(ii) What was the outcome of the first Balkan War?

(iii) Who were defeated in this war?

(iv) What was the name of the Treaty signed at the end of this second Balkan War?

https://www.qb365.in/materials/

(b) Subhas Chandra Bose and INA

(i) How did Subhas Chandra Bose reach Japan?

(ii) Who headed the women wing of Indian National Army?

(iii) How did Subhas Chandra Bose reorganize the INA?

(iv) Name the slogan provided by Subhas Chandra Bose.

43 (அ) பால்கன் போர்கள்

(i) பால்கன் கழகம் ஏன் உருவாக்கப்பட்டது?

(ii) முதல் பால்கன் போரின் விளைவுகள் யாவை?

(iii) இப்போரில் தோற்கடிக்கப்பட்டவர்கள் யாவர்?

(iv) இரண்டாவது பால்கன் போரின் இறுதியில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் பெயரென்ன?

(ஆ) சுபாஷ் சந்திர போஸ் மற்றும் இந்திய தேசிய ராணுவம்

(i) சுபாஷ் சந்திர போஸ் ஜப்பானை எப்படிச் சென்றடைந்தார்?

(ii) இந்திய தேசிய ராணுவத்தின் பெண்கள் பிரிவுக்குத் தலைமை ஏற்றவர் யார்?

(iii) சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய ராணுவத்தை எவ்வாறு மறுசீரமைப்புச் செய்தார்?

(iv) சுபாஷ் சந்திர போஸால் வழங்கப்பட்ட முழக்கம் யாது?

(OR)

(அல்லது)

43 (c) Ramalinga Adigal

(i) What is Jeevakarunya?

(ii) What are the Songs of Grace?

(iii) Point out the major contribution of Samarasa Vedha Sanmarga Sathya Sangam?

(iv) Where did he establish his free feeding house?

(d) Vellore Revolt

(i) When did Vellore Revolt break out?

(ii) Who introduced new military regulation?

(iii) Who was the first victim of the revolt?

(iv) Who was proclaimed by the rebels as their new rules?

https://www.qb365.in/materials/

43 (இ) ராமலிங்க அடிகள்

(i) ஜீவகாருண்யம் என்றால் என்ன?

(ii) அருட்பா என்றால் என்ன?

(iii) சமரச வேத சன்மார்க்க சத்ய சங்கத்தின் முக்கியப் பங்களிப்பைக் குறிப்பிடுக.

(iv) தனது இலவச உணவகத்தை அவர் எங்கே அமைத்திருந்தார்?

(ஈ) வேலூர் புரட்சி

(i) வேலூர் புரட்சி எப்போது வெடித்தது?

(ii) இராணுவத்தில் புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தியவர் யார்?

(iii) புரட்சியின் போது முதலில் பலியானவர் யார்?

(iv) புரட்சியாளர்களால் புதிய மன்னராக அறிவிக்கப்பட்டவர் யார்?

Note: Blind Candidates have to write only notes for the questions related to Map

குறிப்பு : பார்வையற்ற மாணவர்கள் வரைபடத்தில் இடங்களை குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.

44 Mark the following places on the given outline map of India.

(i) Aravalli range

(ii) River Cauvery

(iii) Direction of South-West monsoon winds

(iv) Agasthiyamalai bio-sphere reserve

(v) The main region of black soil

(vi) Any one International Airport

(vii) Atomic power station in Tamil Nadu

(viii) Railway route from Mumbai to Kolkata

கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.

(i) ஆரவல்லி மலைத்தொடர்

(ii) காவிரி ஆறு

(iii) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை

(iv) அகஸ்திய மலை உயிர்க்கோளப் பெட்டகம்

(v) கரிசல் மண் காணப்படும் முக்கிய பகுதி

https://www.qb365.in/materials/

(vi) ஏதேனும் ஒரு பன்னாட்டு விமான நிலையம்

(vii) தமிழ்நாட்டில் உள்ள அணுமின் நிலையம்

(viii) மும்பை முதல் கொல்கத்தா வரையிலான ரயில்பாதை

(OR)

(அல்லது)

Mark the following places on the given outline map of Tamil Nadu.

(i) Nilgiri hills

(ii) Coromandel Coast

(iii) A paddy growing area

(iv) Bavani Sagar Dam

(v) Thoothukudi Port

(vi) Any one International Airport

(vii) Pulicat lake

(viii) Kanyakumari

கொடுக்கப்பட்ட தமிழக வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.

(i) நீலகிரி குன்றுகள்

(ii) சோழமண்டல கடற்கரை

(iii) ஏதேனும் நெல் விளையும் பகுதி

(iv) பவானி சாகர் அணை

(v) தூத்துக்குடி துறைமுகம்

(vi) ஏதேனும் ஒரு பன்னாட்டு விமான நிலையம்

(vii) பழவேற்காடு ஏரி

(viii) கன்னியாகுமரி